797

உ

திருச்சிற்றம்பலம்.

திராவிடமாபாடிய கர்த்தராகிய

# ஸ்ரீமாதவச் சிவஞானயோகிகள் சரித்திரச் சுருக்கம்.

தூத்துக்குடி,

சைவசித்தாந்த சபையாரால்

வெளியிடப்பெற்றது

சைவப்பிரகாச அச்சியந்திரசாலையி[ல்]
பதிப்பிக்கப்பட்டது
தூத்துக்குடி.

1916

Q23:4198w
N16
179490

உ

திருச்சிற்றம்பலம்.

மெய்கண்ட தேசிகன் றிருவடி வாழ்க.

---

திராவிடமாபாடிய கர்த்தராகிய,

# ஸ்ரீமாதவச் சிவஞாநயோகிகள்

## சரித்திரச் சுருக்கம்.

---

பாண்டிய நாட்டிலே பொதியமலைச் சாரலிலே பாபவிநாசமென்னும் ஸ்தலத்துக்கு அருகிலே விக்கிரமசிங்கபுரமென்னும் ஓர் ஊர் உள்ளது. அவ்வூரிலே சற்றேறக்குறைய இருநூறு வருஷங்களுக்கு முன் ஆனந்தக்கூத்தபிள்ளை யென்ற சைவ வேளாளர் ஒருவர் இருந்தார். அவர் சிவபெருமானிடத்தும், அடியார்களிடத்தும் மிகுந்த பக்தியுள்ளவர் அவருடைய பத்தினியார் மயிலம்மையாரென்னும் பெயருடையவர். அவ்வம்மையார் அருந்ததிக்கு ஒப்பான கற்பு உடையவர். இவர்களுடைய வம்

சத்து முன்னோர்கள் அகத்திய மகா முனிவரை நோக்கித் தவஞ்செய்து தமது குடும்பத்திலே ஏழு தலை முறையளவும் அருட்கல்வி நிரம்பிய புத்திரர்கள் பிறக்க வரம் பெற்றிருந்தார்கள். அவ்விதம் ஏழாவது தலைமுறையாகத் தமிழ்நாடுசெய்த தவத்தினாலே ஆனந்தக் கூத்தருக்கு மயிலம்மையார் திருவயிற்றிலே ஒரு சற்புத்திரர் திருவவதாரஞ் செய்தார். பெற்றோர்கள் அவருக்கு "முக்களாலிங்கர்" எனப் பெயரிட்டார்கள். முக்களாலிங்கர் ஒழுக்கம், அன்பு, அருள் முதலிய நற்குணங்களோடு வளர்ந்து வந்தார்.

முக்களாலிங்கர் சிறுபிராயமாயிருக்கும்போது ஒருநாள் பாடசாலையில் படித்துவிட்டு வீட்டுக்குப் புறப்பட்டார். அப்பொழுது திருவாவடுதுறை ஆதீனத்திலுள்ள முனிவர்கள் சிலர் அப்பாடசாலைவீதி வழியாகச் சென்றார்கள். முக்களாலிங்கர் அவர்களைச் சந்தித்து வணங்கி, சுவாமிகளே தாங்கள் அடியேன் வீட்டுக்கு எழுந்தருளித் திருவமுது செய்து செல்லுதல் வேண்டும், என்று பிரார்த்தித்

தார். அம்முனிவர்கள் முக்களாலிங்கருடைய வேண்டுதலுக்கு இசைந்து அவர் வீட்டுக்குச் சென்றார்கள். அச்சமயம் அவர் தந்தையாராகிய ஆனந்தக் கூத்தர் வெளியே சென்றிருந்தார். மயிலம்மையார் அம்முனிவர்களை உபசரித்துத் திருவமுது செய்வித்தார். முக்களாலிங்கர் தமது கருத்துப்படி முனிவர்களை உபசரித்த தாயாரை "அருந்ததியென் னட்மை அடியவர்கட் கென்றும், திருந்த அமுதளிக்கும் செல்வி—பொருந்தவே, ஆனந்தக்கூத்தரகமகிழத் தொண்டுசெயும், மானந்தவாத மயில்" என்று பாடினர். வெளியே சென்றிருந்த ஆனந்தக்கூத்தர் வீட்டுக்கு வந்து நடந்த சங்கதிகளைக்கேட்டு மிகுந்த சந்தோஷம் அடைந்தார்.

பின்பு, அம்முனிவர்களை ஆனந்தக் கூத்தர் நமஸ்கரித்தார். அப்பொழுது முக்களாலிங்கர் தாமும் அம்முனிவர்களோடு செல்லவேண்டுமென்று தெரியப்படுத்தினர். தகப்பனருக்குத் தமது புத்திரரை விட்டுப் பிரியக் கொஞ்சமும் மனம் இல்லை. என்றாலும், தம்முடைய புத்திரர் நல்லவழியிலே

செல்கின்றாரென்னுங் கருத்தினாலே முக்களாலிங்கரை முனிவர்களோடு செல்ல அவர் சம்மதித்தார். முக்களாலிங்கர், ஆதீனத்து முனிவர்களோடு பிரயாணப்பட்டு வழியிலுள்ள சிவஸ்தலங்களை தரிசித்துக் கொண்டு திருவாவடுதுறையை அடைந்தார். அவர் மடாலயத்தினுள்ளே சென்று ஆதீன முதற்குருவாகிய நமச்சிவாய மூர்த்திகளைத் தரிசித்தார். பின்பு சின்னப்பட்டத்தில் எழுந்தருளியிருந்தபின் வேலப்பதேசிகரை அவர் தரிசித்து அன்போடு வணங்கினார். பின் வேலப்ப தேசிகர் முக்களாலிங்கருடைய பக்குவ முதிர்ச்சியைக்கண்டு அவருக்குச் சைவசந்நியாசம் கொடுத்து சிவதீக்ஷை செய்து சிவஞானயோகிக ளென்னும் தீக்ஷாநாமம் இட்டு மெய்கண்ட சாத்திரத்தையும், பண்டார சாத்திரத்தையும் உபதேசித்தருளினார். சிவஞானயோகிகள் அகத்திய மகாமுனிவருடைய வரத்தால் அவதரித்தவராதலால்; வடமொழிக் கடலும் தமிழ் மொழிக்கடலும் எளிதில் நிலைகண்டு உணர்ந்து மகாஞானியாய் வீற்றிருந்தருளினார்.

சிவஞானயோகிகள் பின்பு உலக உபகாரமாகச் சிவஞானபோதத்திற்குத் திராவிட மகாபாஷ்யமென்னும் பேருரையும், இலகு வியாக்கியானமாகிய சிற்றுரையும், சிவஞானசித்தியாருக்குப் பொழிப்புரையும் செய்தருளினார்கள். இவையல்லாமலும் தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, சோமேசர் முதுமொழி வெண்பா, திருவேகம்பர் அந்தாதி, வடதிருமுல்லைவாயில் அந்தாதி, குளத்தூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி, இளசைப்பதிற்றுப் பத்தந்தாதி, கலைசைப் பதிற்றுப் பத்தந்தாதி, செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ், அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், கச்சி ஆனந்தருத்திரேசர் பதிகம், செப்பறை அகிலாண்டேசுவரி பதிகம், திருவேகம்பர் ஆனந்தக் களிப்பு, திருத்தொண்டர் திருநாமக்கோவை, பஞ்சாக்கர தேசிகர் மாலை, தருக்கசங்கிரக அன்னம்பட்டீயங்களின் மொழிபெயர்ப்பு, ஹரதத்தாசாரியர் செய்த சுலோக பஞ்சகத்தின் மொழிபெயர்ப்பு, அப்பதீக்ஷிதர் செய்த சிவதத்துவ விவேக மூல மொழிபெயர்ப்பு, காஞ்சிப்புராண

179490

முதற்பாக மொழிபெயர்ப்பு, சித்தாந்தப் பிரகாசிகை மொழிபெயர்ப்பு, கம்பராமாயண முதற் செய்யுட் சங்கோத்தரவிருத்தி, இலக்கண விளக்கச் சூறாவளி, மரபட்டவணை மறுப்பின் மறுப்பு, எடுத்தென்னுஞ் சொல்லுக்கிட்ட வயிரக்குப்பாயம், சிவஞாநசித்தியாருக்கு ஞானப்பிரகாசமுனிவரியற்றிய சிவசமவாதவுரை மறுப்பு என்பனவற்றை அருளிச் செய்தார்.

ஒரு சமயம் திருப்பாதிரிப் புலியூரிலுள்ள வித்வான்களும், பிரபுக்களும் ஒரு சபைகூடி நூறு பொன்னை ஒரு முடிப்பாக வைத்துக் 'கரையேற விட்ட முதல்வாவுன்னை யன்றியுமோர் கதியுண்டாமோ' என்ற கடைசியடி வரும்படி ஒரு பாட்டுப் பாடினவர்கள் அந்த முடிப்பை எடுத்துக்கொள்ளலாமென்று சொன்னார்கள். இச்செய்தியை அறிந்த ஒரு பிராமணன் அதைப் பெற விரும்பினன். அச்சமயம் சிவஞான யோகிகள் சுவாமி தரிசனம் செய்தற்காக அவ்விடம் வந்திருந்தார். பிராமணன் அவர்களிடம் சென்று வணங்கித் தனதுவிருப்பத்

தைத் தெரியப்படுத்தினான். கருணாகர மூர்த்தியா
கிய யோகிகள் அவனுடைய நிலைமையையுணர்ந்து
அப்பொன் முடிப்பை எடுத்துக்கொள்ளச் சொல்
லிவிட்டு "வரையேற விட்டமுதஞ் சேந்தனிட வரு
ந்தினைவல்லினமென்றாலும், உரையேற விட்டமுத
லாகுமோ வெனைச்சித்தென் றுரைக்கி லென்னும்,
நரையேற விட்டமுத னாளவனைக் கொண்டுநறும்
புலிசைமேவும், கரையேற விட்டமுதல் வாவுன்னை
யன்றியுமோர் கதியுண்டாமோ." என்று செய்யு
ளைப் பேசுவதுபோலப் பூர்த்திசெய்தருளினார்.

இவ்விதம் சிவஞானயோகிகள் உலோகோபகார
மாகஅநேக சாஸ்திரங்களையும், உரைகளையும், மறு
ப்புக்களையும் அருளிச்செய்து அவற்றையும் ஏனைய
நூல்களையும் திருத்தணிகைக் கச்சியப்ப முனிவர்,
மதுரகவி தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர்,
காஞ்சிபுரம் சிதம்பர முனிவர், இலக்கணம் சிதம்
பரநாத முனிவர், காஞ்சிபுரம் முத்துக்குமாரசுவாமி
தேசிகர், காஞ்சிபுரம் சரவணபத்தர், இராமநாதபு
ரம் சோமசுந்தரம்பிள்ளை, திருமுக்கூடல் சந்திரசே

கர முதலியார், காவாந்தண்டலம் அடைக்கலங்காத்த முதலியார், [illegible]ம்பார்கோயில் ஸ்தானிகர் கலியாணசுந்தரவுபாத்தியாயர் முதலிய நன்மாணாக்கர்களுக்குப் போதித்தருளினர்.

பின்பு தவமே திருவுருக்கொண்டு விளங்கிய சுவாமிகள் நிஷ்டையில் வீற்றிருந்தருளி அத்துவித சித்தாந்த முத்தியடைந்தனர். சுவாமிகள் முத்தியடைந்தநாள் கொல்லம் ௯௱௬௰௫ (மெய்கண்டான் ஆண்டு ௬௱௬௰௨) விசுவாவசு வருஷம் சித்திரைமீ ஞாயிற்றுக்கிழமை ஆயிலிய நக்ஷத்திரமாம்.

சைவர்கள் அனைவரும் மேற்கண்ட விதமாக அநேக நூல்களையியற்றியருளிச் சைவசித்தாந்தப் பிரதிஷ்டை செய்தருளிய சுவாமிகளுடைய திருநக்ஷத்திரத்திலே விசேஷ குருபூஜைசெய்து திருவருள்பெற்று உய்வார்களாக.

திருச்சிற்றம்பலம்.